நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 242 /2022

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாப்பாத்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | கள்ளிக்காரன் வளவு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 55 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 13–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**1ம் எதிரி ஆஜரில் இல்லை. 2,3, 4வது எதிரிகள் ஆஜர்.அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.37PM.

1. இந்த வழக்கில் ஆஜர் எதிரிகள் சேர்ந்து என்னை அடித்துவிட்டார்கள் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் 2வது எதிரி கணேசன் என்பவரின் மகளைதான் எனது மகனுக்கு திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மருமகள் என்னையும் எனது மகனையும் எதிர்த்து துடுக்கு

தனமாக பேசி வந்தார் என்றால் சரிதான்.

2. திருமணம் ஆகி இரண்டே மாதத்திலேயே கரு தரித்துவிட்டார் என்றால் சரிதான். எனது மகனிடம் மேற்படி 2 மாதத்திலேயே சண்டை போட்டு கொண்டு எனது மருமகள் சாணிபவுடைரைகுடித்துவிட்டு எடப்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டு இருந்தார் என்றால் சரிதான். அந்த சம்பவத்திற்கு பிறகு எனது மருமகள் எனது மகனுடன் சேர்ந்து வாழாமல் அவரது பெற்றோர் வீட்டில்தான் உள்ளார் என்றால் சரிதான்.
3. எதிரிகள் வீட்டில்தான் எனது மருமகளுக்கு குழந்தை பிறந்தது என்றால் சரிதான். சாணி பவுடரை குடித்த சம்பவத்திற்குபின்னிட்டு எனது மருமகளை எனது வீட்டிற்கு அழைத்து வர எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.குழந்தை மேட்டுர் அரசு மருத்துவமனையில் தான் பிறந்தது என்றால் சரிதான். குழந்தைக்கு பிறப்பு சான்றிதழ் வாங்க எனது மகனின் ஆதார் அட்டை அவசியம் தேவைப்படுகிறது என்று எதிரி தரப்பு என்னிடம் கேட்டார்கள் என்றால் சரிதான்.
4. நான் எனது மகனின் மற்றும் மருமகளின் ஆதார் அட்டைகளை கேட்டபோது நான் தராமல் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்தபோது எனது மகன் மருத்துவமனைக்கு செல்லும்போது ஆதார் அட்டையை ஒரு கைப்பையில் வைத்து எடுத்து சென்றுள்ளார். அங்கு குழந்தையை பார்க்க சென்றபோது எனது சம்மந்தியிடம் கொடுத்துவிட்டு சென்றுள்ளார். திரும்பி வந்து பார்க்கும்போது அந்த கைப்பையில் ஆதார் அட்டை இல்லை.
5. குழந்தை மற்றும் மருமகளை கூட்டி செல்வதற்காக நங்கவள்ளி பட்டாளி மக்கள் கட்சி ஒன்றிய சேர்மன் பாலசுப்ரமணியத்திடம் எதிரி தரப்பினர் பஞ்சாயத்து வைத்தார்கள் என்றால் சரிதான். பஞ்சாயத்திற்கு நாங்கள் ஏற்பாடு செய்யவில்லை என்றால் சரிதான்.இரு குடும்பத்தாரும் கேட்டு கொண்டதன் பேரில் தான் பாலசுப்ரமணியம் பஞ்சாயத்திற்கு அழைத்ததாக சொல்லி இருந்தார் அது தவறு.அவர்கள் அங்கு பஞ்சாயத்திற்கு அழைத்ததால் நாங்கள் சென்றோம். உண்மையில் எனது மகனை எனது மருமகளுடன் சேர்த்து வைக்க சொல்லி நான்தான் பஞ்சாயத்து செய்ய சொன்னேன் என்றால் சரியல்ல.
6. நாங்கள் சுமார் 30 நபர்கள் பஞ்சாயத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். எதிரி

தரிப்பினர் சுமார் ஒரு 10 நபர்கள் வந்துதிருப்பார்கள். அந்த பஞ்சாயத்து எனது மகன் மற்றும் மருமகள் எதிரிகள் வீட்டிற்கு போக கூடாது என்றும் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வரக்கூடாது என்றும் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தரப்பில் பஞ்சாயத்து பேசிய அவரது உறவினர்கள் தான் அவ்வாறு சொல்லி அனுப்பினார்கள். நான் அவ்வாறு சொன்னதால்தான் எதிரிகள் தரப்பினர் அதெல்லாம் முடியாது, அதெப்படி எங்களை மகளை பார்க்காமல் இருக்க முடியும் என்று சொன்னார்கள் என்றாலும், அதை கேட்டவுடன் எங்களுடன் வந்திருந்த அருணாச்சலம் என்பவர் ஓடிச் சென்று ஆஜர் 2வது எதிரி கணேசனை கண்ணத்தில் பளார் என்று அறைந்துவிட்டார் என்றாலும், அதனால்தான் பிரச்சினை ஏற்பட்டது என்றாலும், சரியல்ல.

7. இந்த சம்பவத்திற்கு பின்னிட்டு 4 வருடமாக எனது மருமகள் எதிரிகள் வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். 4 வருடத்திற்கு பின்னிட்டு நான்தான் எதிரிகள் ஊரை சார்ந்த சேட்டு என்பவர் மூலம் பேசி எனது மருமகளையும், பேத்தியையும் நல்லபடியாக பார்த்து கொள்வதாக சொல்லி பேசி எனது வீட்டிற்கு அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல. அவர்களது தரப்பில்தான் பேசி அழைத்து வந்தார்கள்.

8. இப்பவும் எதிரிகள் யாரும் எங்கள் வீட்டிற்கு வரக்கூடாது என்றும், எனது மருமகளும் எதிரிகள் வீட்டிற்கு போககூடாது என்ற நிபந்தனையின் பேரில்தான் எனது மகனுடன் சேர்ந்து வாழ அனுமதித்தேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து பேசியவர்கள்தான் அவ்வாறு பேசி அனுப்பி வைத்தார்கள். தற்போது எனது மருமகள் 8 மாத கர்ப்பிணியாக உள்ளார் என்றால் சரிதான்.

9. 8 மாதங்களாக எதிரிகள் எனது மருமகளுக்கு வளைகாப்பு செய்ய அனுமதிக்கவில்லை என்றாலும், நாங்களும் வளைகாப்பு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் வளைகாப்பு செய்யாததால் நாங்கள் வளைகாப்பு செய்து விட்டோம்.

10. சக்திவேல்தான் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி குடுமியை பிடித்து அடித்தார். சுமார் 1 ½ அடி நீளமுள்ள கான்கீரிட் கம்பியை வைத்து எனது பின்னதலையில் அடித்தார். என்னை 1ம் எதிரி அடிக்கும்போது எங்களுடன் வந்த 30 நபர்கள் சேர்மன் வீட்டில் உள்ள அலுவலகத்தில் பெண்ணையும்

பையனையும் வைத்து பேசிக் கொண்டிருந்தார்கள். நான் வெளியே தூணுக்கு அருகில் நின்று கொண்டிருந்தேன். எதிரிகள் 4 நபர்களையும் உள்ளே இருந்து பஞ்சாயத்து பேசியவர்கள் வெளியே போக சொன்னதால் வெளியே வந்து வெளியே நின்று கொண்டிருந்த என்னை கோபத்தில் அடித்துவிட்டார்கள். சத்தம் கேட்டு உள்ளே இருந்தவர்கள் வந்துவிட்டார்கள்.

11. என்னை அடித்த கம்பியை காவல் துறையினரிடம் நான் ஒப்படைக்கவில்லை. என்னுடன் வந்த எனது மகன் பூபதி மருத்துவமைனயில் சேர்த்து விட்டு மீண்டும் சென்று எடுத்து கொடுத்திருக்கலாம் எனக்கு சரியாக தெரியவில்லை.நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கபடும்போது இரும்பு கம்பியால் அடித்ததால் ஏற்படிக்கூடிய காயம் எதுவும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல.

12. பஞ்சாயத்து சேர்மனின் வீடு மற்றும் அலுவலகம் ஒன்றாகத்தான் உள்ளது அலுவலகத்தில் வைத்துதான் பஞ்சாயத்து பேசினார்கள். அந்த அலுவலகம் ஒரே ஒரு சிறிய சதுரமான அறை என்றாலும் அதில் 30 நபர்கள் உள்ளே இருந்ததாகவும், என்னை அடிப்பதை வந்து தடுத்தகாவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து பேசும்போது பஞ்சாயத்து தலைவர் நான் பெண்ணையும் பையனையும் வைத்து பேசிக்கொள்கிறேன். மற்றவர் வெயிளே காத்திருங்கள் என்று சொன்னார் என்றால் சரிதான்.

13. எல்லாரும் வெளியே இருக்கும்போது என்னை சக்திவேல் அடித்தார் என்றும் அதை வெளியே இருந்த நபர்கள் தடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டவாறு சம்பவம் நடக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு இரும்பு கம்பியால் அடித்திருந்தால் அந்த இரும்பு கம்பியை காவல் துறையினர் கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல.

14. 2ம் எதிரி கணேசன் என்பவர் எனது ஜாக்கெட்டையும் சேலையையும் பிடித்து கிழித்து விட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே கிழிந்த உடையில் தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ஆமாம். இந்த சம்பவம் மதியம் சுமார் 12.00 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். 1.00 மணி சுமாருக்கு மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும் சம்பவத்திற்கு பிறகு சுமார் 2 மணிநேரம் கழித்து சம்பவ இடத்தில் இருந்து 20

கிலோமீட்டர் தொலைவில் உள்ள எடப்பாடி அரசு மருத்துவமனையில் மதியம் 2.40 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்துள்ளேன் என்றால் இரண்டு மருத்துவமனைக்கு காரில் கொண்டு சென்றார்கள் நான் மயக்கம் ஆக இருந்ததால் எனக்கு சரியாக ஞாபகமில்லை.

**15.** எனக்கு சொந்த ஊர் ஜலகண்டாபுரம் என்றால் சரிதான். ஜலகணடாபுரத்திலும் ஒரு அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். சொந்த ஊரில் ஜலகண்டாபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொள்ளாமல் 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள எடப்பாடி அரசு மருத்துவமனையில் சேர்ந்து எதிரிகளை பழிவாங்கும் எண்ணத்தில் பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பின்தலையில் அடிப்பட்டதும் மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டேன். மருத்துவமனை செல்லும் வரை சுய நினைவு இல்லை.

**16.** 1ம் எதிரி சக்திவேல் இரும்பு கம்பியால் தாக்கியவுடன் மயக்கம் போட்டு கீழே விழுந்து விட்டதாக நான் சொல்லியுள்ளதால் அதன் பின்னிட்டு எதிரிகள் தாக்கியதாகவும், அதை நான் பார்த்ததாகவும் நான் சொல்வது தவறு என்றாலும் சரியல்ல. எனது மகன் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். அதன் பிறகுதான் ஓடி வந்தார்கள். எனது மகன் உள்ளே இருந்தார்.

**17.** இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்தாக குறிப்பிடப்படும் வேடி, மற்றும் செல்வம் ஆகிய இருவரும் எனது உறவினர்கள் என்றாலும், அவர்கள் மீது வழக்கு பதிவு செய்துவிடுவார்கள் என்ற அச்சத்திலும் நாங்கள் கேட்ட கொண்டதற்கு இணங்க பொய் வழக்கு பதிவு செய்துவிடுவார்கள் என்றால் சரியல்ல. பூபதி எனது இளைய மகன் ஆவார்.

**18.** பிரச்சினைக்கு முழுக்காரணம் நான் என்றாலும், நான்தான் எனது மகனுக்கும் மருமகளுக்கும் பல நிபந்தனைகளை விதித்து பிரச்சினைக்கு காரணமாக இருந்தேன் என்றாலும், ஆனால் எதிரிகள் என்னை தாக்கி எனக்கு காயம் ஏற்பட்டதாக பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.43PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 242 /2022

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூபதி |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | கள்ளிக்காரன்வளவு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 34 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 13–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–04.45 PM.

**1.** ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியும். இந்த சம்பவம் நான் தற்கொலை செய்ய வேண்டி ஒரு விஷ காயை சாப்பிட்டதாலும் எனக்கும் என் மனைவிக்கும் ஏற்பட்ட பிரச்சினைகளாலும், ஏற்பட்டது என்றால் சரிதான். எனது மனைவி காவல் துறையை வைத்து என் மீது வழக்கு பதிவு செய்துவிடுவேன் என்று

மிரட்டியதால்தான் நான் விஷ காயை சாப்பிட்டேன்.

2. என்னை தற்கொலைக்கு தூண்டியதன் பேரில் என் மனைவி தரப்பினர் கூப்பிட்டார்கள்.ஆனால் அங்கு வராமல் சேர்மன் வீட்டிற்கு பஞ்சாயத்திற்கு அழைத்தார்கள். நான் B.E படித்துள்ளேன். எனது மனைவி B.Sc படித்துள்ளார். இந்த பிரச்சினை திருமணம் ஆகி 1 வருடத்திற்கு பிறகு நடைபெற்றது. திருமணம் ஆகி இரண்டே மாதத்தில் எனது மனைவி கரு தரித்துவிட்டார் என்றால் சரிதான்.

3. நானும் எனது அம்மாவும் சேர்ந்து எனது மனைவி சாணி பவுடரை குடித்து விட்டு எடப்பாடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. சாணி பவுடரை குடித்திருக்க வாய்ப்பில்லை . என்னை மிரட்டும் விதமாக சிகிச்சைக்கு சேர்ந்து கொண்டார். எங்களுக்கு தெரியாமலேயே மருத்துவமனையில் இருந்து சென்றுவிட்டார். நான் சொல்வது தவறு என்றாலும், உண்மையில் சாணி பவுடரை குடித்துவிட்டார் என்றாலும் அதற்கு அங்கு வயிறு கழுவி சிசிக்சை அளித்தார் என்றாலும், என்மீது வழக்கு பதிவு செய்யக்கூடாது என்பதற்காக நான் தான் சேர்மேன் மூலம் பஞ்சாயத்து பேச ஏற்பாடு செய்தேன் என்றாலும் சரியல்ல.

4. திருமணம் ஆகி இரண்டாவது மாதத்தில் எனது மனைவி சாணி பவுடர் குடித்தாக மருத்துவமனையில் சேர்த்தார். அப்போது சேர்மன் வீட்டிற்கு பஞ்சாயத்திற்கு செல்லவில்லை. அதன் பிறகு எனக்கு குழந்தை பிறந்தது. அதன் பின்னிட்டு பிரச்சினை ஏற்பட்டு தற்கொலைக்கு முயன்றேன். அப்போதுதான் சேர்மன் வீட்டிறக்கு பஞ்சாயத்திற்கு சென்றோம்.

5. சாணி பவுடர் குடித்தது முதற்கொண்டு குழந்தை பிறக்கும் வரை எனது மனைவி எதிரிகள் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த பிறகு எனது குழந்தைக்கு பிறப்பு சான்றிதழ் வாங்குவதற்காக என்னுடைய ஆதார் அட்டை தேவைபட்டது என்றாலும், நான்தான் அதை கொடுக்காமல் பிரச்சினை செய்தேன் என்றாலும் சரியல்ல. என்னுடன் எதிரிகளும் தான் வந்து பிறப்பு சான்றிதழ் வாங்கி சென்றார்கள்.

6. குழந்தை பிறந்ததும் 4 வருட காலம் எனது மனைவி எதிரிகள் வீட்டில்தான் இருந்தார் என்றால் சரியல்ல. 3 வருட காலம்தான் அங்கு இருந்தார். எதிரிகள் வீட்டில் எனது மனைவி இருக்கும்போது நான்தான் விஷமில்லாத ஏதே ஒரு

காயை சாப்பிட்டு விட்டு பொய் வழக்கு பதிவு செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் சொல்லும் ஒடுவங்காய் விஷதன்மை அற்றது என்றாலும், அரளி விதையை தவிர எந்த விஷகாயமும் இல்லை என்றாலும் எதிரிகளை மிரட்டுவதற்காக பொய்யாக சாப்பிட்டு விட்டேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கும் எனது அண்ணனுக்கும் பிரச்சினை என்றாலும், அதன் காரணமாகத்தான் ஒடுவங்காயை சாப்பிட்டுவிட்டாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

8. 3 வருடமாக எனது மனைவி பிரிந்து இருந்தும் எனது மனைவியை அழைத்து வர எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் 4 பேரும் எங்களை விசாரித்து கொண்டிருக்கும்போது எனது அம்மாவை அடித்துவிட்டார்கள். எதிரிகள் எனது அம்மாவை அடித்ததை நான் நேரில் பார்த்தேன்.

9. அந்த பஞ்சாயத்திற்கு எனது தரப்பில் 30 நபர்கள் வந்திருந்தார்கள் என்றால் சரியல்ல. இரு தரப்பினரும் சேர்ந்து 30 நபர்கள் வந்திருந்தனர். சேர்மன் வீட்டில் எங்கள் இருவரையும் தான் விசாரித்தார்கள். மற்றவர்கள் வெயியே இருந்தார்கள். 1ம் எதிரி சக்திவேல் இரும்பு கம்பியால் எனது அம்மாவை அடித்ததை நான் நேரில் பார்த்தேன். எனது அம்மாவை அடிக்கும்போது நான் நின்று கொண்டிருந்த அறை சிறிய ஹால் என்பதாலும், சேர்கள் நிறைய போட்டு இருந்ததாலும் உடனடியாக அதை தாண்டி சென்று நான் தடுக்க முடியவில்லை.

10. எங்களுடன் வந்தவர்கள் தடுக்க செல்லும் முன்பாக விரைவாக சம்பவம் நடந்து முடிந்துவிட்டது. எனது மனைவிக்கு திருமணத்தின்போது 5 பவுன் தங்க நகை போட்டார்கள் என்றால் சரிதான். எனது தரப்பில் தாலிக்கொடி மோதிரம் சேர்ந்து 5 பவுன் போட்டேன் நான் நிதி நிறுவனத்தில் வேலை செய்கிறேன். நானும் எனது அம்மாவும் 5 பவுன் சீர் வரிசை போதாது என்று பிரச்சினை செய்தோம் என்றாலும் அதற்கு என் மனைவி எதிர்த்து பேசியதால் மனைவி தர்ப்பினரை பழி வாங்கும் எண்ணத்தில் பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. தற்போது எனது மனைவி 8 மாத கர்ப்பமாக உள்ளார் என்றால் சரிதான். 8 மாதமாக எனது மனைவி எதிரிகள் வீட்டிற்கு செல்லவில்லை என்றால்

சரியல்ல. எதிரிகள் எனது அம்மாவை அடித்ததை நான் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் நான் பார்த்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவை அடித்து ரத்த காயத்துடன் அவர் மயங்கி விட்டார் நான் எதிரிகள் தாக்கியதை என் அம்மா பார்க்கவில்லை. எனது அம்மாவுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–05.25 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**